செ.வெ.எண்.610 நாள்.29.11.2017

**காஞ்சிபுரம் மாவட்டம்**

**செம்பாக்கம் நகராட்சி பகுதிகளில் மழைநீர் வடிகால்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்**

****************

செம்பாக்கம் நகராட்சி மகாலட்சுமி நகர், வள்ளல் யூசப் நகர், வேணுகோபால் விரிவாக்கம் பகுதிகளில் மழைநீர் வடிகால்களை ஆய்வு செய்த மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் மழைநீர் விரைந்து வடிவதை பார்வையிட்டார். வடிகால்களில் சிறு அடைப்புகள் கூட இல்லாத வகையில் தூர்வாரவும் குப்பைகள் மீண்டும் சேர்ந்து அடைப்பு ஏற்படாமல் தவிர்க்க தக்க நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும் அதிக மழை பெய்தாலும் மழைநீர் குடியிருப்பு பகுதிகளில் தேங்காமல் வெளியேற்றுவதற்கு அறிவுரை வழங்கினார். தேவையான இடங்களில் மழைநீர் விரைந்து வடிவதற்கு மேலும், குழாய்கள் அமைக்க கேட்டுக்கொண்டார். மழைநீர் தாழ்வான பகுதிகளில் அதிகமாக தண்ணீர் தேங்க வாய்ப்புள்ளதால் அப்பகுதிகளில் அதிக கவனம் செலுத்த அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.பின்னர், திருமலை நகர், செம்பாக்கம் ஏரி உபரிநீர் போக்கி உள்ளிட்ட இடங்களிலும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய ஐயப்பன் தாங்கலில் தந்தி கால்வாய், குளத்துவாஞ்சேரி குடியிருப்புகள், மௌலிவாக்கம், ரெட்டேரி, மாங்காடு பிரதான சாலை, போரூர் ஏரி உபரிநீர் வாய்க்கால் ஆகிய பகுதிகளிலும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு மேற்கொண்டார். முன்னதாக செம்பாக்கம் நகராட்சி, கணேஷ் நகர், மேத்தா நகர் பகுதிகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் செம்பாக்கம் நகராட்சி ஆணையர் திரு.கே.ராஜேந்திரன் மற்றும் நகராட்சி, பொதுப்பணித்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.

